பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

08 10 2024 Tuesday 12 40Pm

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- இந்திய வான்வெளியை பாதுகாப்பது மட்டுமல்லாமல், பேரிடர் காலங்களில் மனிதநேய உதவிகளை ஆற்றுவதில் விமானப்படை முக்கியப் பங்கு வகிப்பதாக தேசிய விமானப்படை தினத்தை ஒட்டி, குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

- ஹரியானா மற்றும் ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் தற்போது எண்ணப்பட்டு வருகின்றன – ஹரியானாவில் பிஜேபியும், ஜம்மு காஷ்மீரில் எதிர்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணியும் முன்னிலை வகிக்கின்றன.

- தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் 14 புதிய முதலீடுகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாக மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு கூறியுள்ளார்.

- மேற்காசியாவில் அமைதியை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகளை உலக நாடுகள் மேற்கொள்ள வேண்டும் என்று ஐ.நா பொதுச்செயலாளர் திரு. அன்டோனியோ குட்ரஸ் வலியுறுத்தியுள்ளார்.

- நியூயார்க் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில், இந்தியாவின் அபெய் சிங், வேலவன் செந்தில்குமார் ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>><<<<<

இந்திய விமானப்படையின் 92வது ஆண்டு நிறைவு விழா இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், விமானப்படை வீரர்கள், சாதனையாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

வான்வெளியை பாதுகாப்பது மட்டுமல்லாமல், பேரிடர் காலங்களில் மனிதநேய உதவிகளை ஆற்றுவதிலும் விமானப்படை முக்கியப் பங்கு வகிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

விமானப்படை வீரர்களின் செயல்பாடுகள் நாட்டிற்கு ஊக்கமளிப்பதாக உள்ளது என்று திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், தனித்துவமான திறமை மற்றும் நிபுணத்துவத்தோடு இந்திய விமானப்படை செயல்பட்டு வருவதாக பாராட்டியுள்ளார்.

தேசத்தை பாதுகாப்பதில் விமானப்படையின் பங்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்று பிரதமர் கூறியுள்ளார்.

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், விமானப் படையினரின் தீரமிக்க செயல்பாடு ஈடுஇணையற்றதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் உள்ளிட்டோரும் விமானப்படையினருக்கு தங்களது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

விமானப்படை தினத்தையொட்டி சென்னை தாம்பரத்தில் உள்ள விமானப்படை தளத்தில் நடைபெற்ற விழாவில், முப்படைகளின் தலைவர் ஜென்ரல் **Anil Chauhan** சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, தேசியக்கொடியை ஏற்றிவைத்தார்.

இவ்விழாவில் வீரர்களின் சிறப்பு அணிவகுப்பும், விமானங்களின் அணிவகுப்பும் நடைபெற்றது.

விமானப்படையின் தளபதி ஏர்சீப் மார்ஷல் **A.P. Singh** கலந்து கொண்டு அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

விழாவில் பேசிய அவர், உலகில் தற்போது நிலவும் நிச்சயமற்ற சூழல் காரணமாக, எழுந்துள்ள சவால்களை எதிர்கொள்ளும் வகையில் விமானப்படை தயாராக உள்ளதாக கூறினார்.

தாய் நாட்டிற்காக உயிரிழந்த வீரர்களின் தியாகம் போற்றத்தக்கது என்றும், அவர்களது தியாகத்திற்கு ஈடுஇணையில்லை என்றும் அவர் கூறினார்.

ஆற்றல்மிக்க வலிமையான தன்னிறைவு கொண்ட விமானப்படை என்ற கருப்பொருளின் அடிப்படையில் இந்த ஆண்டு சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்படவதாக அவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு, விமானப்படையில் புதிய போர் விமானங்கள் இணைக்கப்பட்டு பல சாதனைகள் நிகழ்த்தப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

61 ஆண்டுகளுக்குப் பின்னர், 30க்கும் மேற்பட்ட நாடுகளுடன் இணைந்து தரங் சக்தி என்ற கூட்டுப் பயிற்சி நடத்தப்பட்டதாகவும் அவர் கூறினார்.

பாதுகாப்பு தளவாடங்களை உள்நாட்டிலேயே தயாரிக்கும் வகையில் சுயசார்பு இந்தியா திட்டத்தின் கீழ், பாதுகாப்பு சாதனங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருவதாக ஏர்சீப் மார்ஷல் **A.P. Singh** கூறினார்.

இந்த விழாவில் சிறப்பு அம்சமாக சூரியகிரண் மற்றும் சாரங் குழுக்களின் விமான சாகசங்கள் நடைபெற்றன.

அதிநவீன போர் ஹெலிகாப்டர் பிரச்சந்த் மற்றும் தேஜஸ் போர் விமானத்தின் செயல்விளக்கங்களும் இடம்பெற்றன.

ஓய்வு பெற்ற ராணுவ தளபதிகள் மற்றும் விமானப்படையைச் சேர்ந்தவர்களும் அவர்களது குடும்பத்தினரும் இந்த விழாவில் பங்கேற்றனர்.

**>>>>><<<<<**

ஹரியானா மற்றும் ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் தற்போது எண்ணப்பட்டு வருகின்றன.

ஹரியானாவில் பிஜேபியும், ஜம்மு காஷ்மீரில் எதிர்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணியும் முன்னிலை வகிக்கின்றன

ஹரியானாவில் மொத்தம் உள்ள 90 இடங்களில் பிஜேபி 50 இடங்களிலும், காங்கிரஸ் 34 இடங்களிலும், இந்திய தேசிய லோக்தளம், பகுஜன் சமாஜ் கட்சி தலா ஒரு இடத்திலும் முன்னிலை வகிக்கின்றன. சுயேச்சை வேட்பாளர்கள் 4 தொகுதிகளில் முன்னிலை பெற்றுள்ளனர்.

ஜம்மு காஷ்மீரில் மொத்தம் உள்ள 90 இடங்களில், தேசிய மாநாட்டுக் கட்சி 42 இடங்களிலும், காங்கிரஸ் 9 இடங்களிலும், பிஜேபி 26 இடங்களிலும், மக்கள் ஜனநாயக கட்சி 3 இடங்களிலும், மக்கள் மாநாட்டுக் கட்சி இரண்டு இடங்களிலும், மார்க்சிஸ்ட கம்யூனிஸ்ட் கட்சி ஒரு இடத்திலும் முன்னிலை வகிக்கின்றன. 7 தொகுதிகளில் சுயேச்சை வேட்பாளர்கள் முன்னிலை பெற்றுள்ளனர்.

தேர்தல் முடிவுகளை **eci.gov.in** என்ற இணையதளத்தில் உடனுக்குடன் அறிந்துகொள்ளலாம் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

**>>>>><<<<<**

இந்தியாவில் பயணம் மேற்கொண்டுள்ள மாலத்தீவு அதிபர் திரு. **Moahamed Muizzu,** திருமதி. **Sajitha Mohamed** இருவரும் இன்று தாஜ்மஹாலை பார்வையிடுகின்றனர்.

உத்தரபிரதேச மாநில அரசு சார்பாக அமைச்சர் திரு. யோகேந்திர உபாத்யாய் வரவேற்கவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மாலத்தீவு அதிபர் தாஜ்மஹாலை பார்வையிடுவதை ஒட்டி, இரண்டு மணிநேரம் பொதுமக்களுக்கு அனுமதி இல்லை என்று காவல்துறை தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

தமிழக அமைச்சரவைக் கூட்டம் முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று நடைபெற்றது.

சென்னை தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் புதிதாக துணை முதலமைச்சராக பொறுப்பேற்ற திரு. உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள் இதில் கலந்து கொண்டனர்.

இதில் தமிழக அரசின் தலைமைச்செயலாளர் திரு. முருகானந்தம், அரசு துறைகளின் முதன்மைச் செயலாளர்களும் இதில் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில் எதிர்வரும் பருவமழைக்கான ஆயத்தங்கள், முதலீடுகள் உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்பட்டதாக தகவல்கள் கூறுகின்றன.

இந்த கூட்டத்திற்கு பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் 14 புதிய முதலீடுகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

38 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் முதலீடுகளின் மூலமாக, 46 ஆயிரத்து 931 பேர் வேலைவாய்ப்பினை பெறுவார்கள் என்று அமைச்சர் கூறினார்.

>>>>><<<<<

வடகிழக்கு பருவமழை காலத்தில் ஏற்படும் நோய் பாதிப்புகளை தடுக்கும் வகையில், தமிழகம் முழுவதும் ஆயிரம் இடங்களில் மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதனைத் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - மா. சு 40 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

இந்திய பங்குச் சந்தையில் சென்செக்ஸ் குறியீடுகள் இன்று 340 புள்ளிகள் உயர்ந்து, 81 ஆயிரத்து 394 ஆக உள்ளது.

தேசிய பங்குச் சந்தை நிஃப்டியும், 114 புள்ளிகள் உயர்ந்து 24 ஆயிரத்து 910ஆக உள்ளது.

>>>>><<<<<

மேற்காசியாவில் அமைதியை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகளை உலக நாடுகள் மேற்கொள்ள வேண்டும் என்று ஐ.நா பொதுச்செயலாளர் திரு. அன்டோனியோ குட்ரஸ் வலியுறுத்தியுள்ளார்.

காஸாவில் இஸ்ரேல் - ஹமாஸ் அமைப்பினரிடையே மோதல் தொடங்கி, ஓராண்டு ஆகியுள்ள நிலையில், அவர் வெளியிட்டுள்ள காணொலிப் பதிவில் இதனை தெரிவித்துள்ளார்.

பிணைக் கைதிகளை விடுவிப்பதற்கு இதுவே தகுந்த நேரம் என்றும், அப்பகுதியில் சர்வதேச சட்டங்களின் படி, அமைதியை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டும் என்றும் திரு. அன்டோனியோ குட்ரஸ் கூறியுள்ளார்.

>>>>><<<<<

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில், இந்தியாவின் அபெய் சிங், வேலவன் செந்தில்குமார் ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

நியூயார்க்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இங்கிலாந்தின் **Adrian Waller** காயம் காரணமாக போட்டியிலிருந்து விலகியதை அடுத்து, அபெய் சிங் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

மற்றொரு ஆட்டத்தில் இந்தியாவின் வேலவன் செந்தில் குமார் 11-8, 11-9, 11-8 என்ற நேர்செட்கணக்கில் எகிப்தின் **Omar Mossad –**ஐ தோற்கடித்தார்.

>>>>><<<<<

ஆர்ட்டிக் ஓபன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

ஃபின்லாந்தின் வான்டாவில் 13-ஆம் தேதிவரை இப்போட்டி நடைபெறுகிறது.

இதில், இந்தியா சார்பில் லக்ஷயா சென், ஸ்ரீகாந்த், பி வி சிந்து, மாள்விகா பன்சூட் உள்ளிட்ட 12 வீரர்கள் பங்கேற்கின்றனர்.

>>>>><<<<<

சென்னையில் நடைபெற்று வரும் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இளையோர் இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது நாளான இன்று இந்தியா தனது முதல் இன்னிங்ஸில் சற்றுமுன்வரை 9 விக்கெட் இழப்புக்கு 477 ரன் எடுத்துள்ளது.

>>>>>END<<<<<